# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை- 2023

| | | |
|---|---|---|
| **தரம் :- 11** | **கர்நாடக சங்கீதம் I,II** | **நேரம் :- 3 மணித்தியாலம்** |
| **சுட்டெண்:……………………** | Carnatic Music I,II | **மேலதிக வாசிப்பு நேரம்:- 10 நிமிடம்** |

**கவனிக்க:**

- **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

1) சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் உருப்படி

1. பதம் 2. தில்லானா 3. கீர்த்தனை 4. அலங்காரம்

2) பல வாத்தியங்கள் கூட்டாக இசைக்கப்படுவது

1. மல்லாரி 2. பல்லியம் 3. தனியாவர்த்தனம் 4.சல்லாரி

3) இந்தியசங்கீதத்தில் வாத்தியங்களுக்கெல்லாம் அரசி எனப்படுவது

1. வயலின் 2. தம்புரா 3. வீணை 4. கிற்றார்

4) இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறும் நாடகம்

1. நாட்டிய நாடகம் 2. சிறுவர் நாடகம் 3. அரங்க நாடகம் 4. இசை நாடகம்

5) தியாகராஜ ஸ்வாமிகள் கிருதிகளில் வெளிப்படும் ரஸம்.

1. சிருங்கார ரஸம் 2. நாளிகேர ரஸம் 3. திராட்சை ரஸம் 4. கதலி ரஸம்

6) ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சுத்த மத்திமம், பஞ்சமம், கைசிகி நிஷாதம் என்ற ஸ்வரஸ்தானங்களை உடைய இராகம்

1. மோகனம் 2. மத்தியமாவதி 3. ஆரபி 4. ஹம்சத்வனி

7) 72 மேளகர்த்தா அமைப்பில் 5வது, 11வது சக்கரப் பெயர்கள் முறையே.

1. பாண - ருத்ர 2. அக்னி – வஸு 3. நேத்ர – ரிஷி 4. பாண - இந்து

8) முத்துஸ்வாமி தீக்ஷிதர் கோவிலூர் இறைவன் மீது கதவு திறக்கப் பாடிய கிருதி.

1. ‘‘கஞ்சதளாயதாட்சி’’ 2. ‘‘நம்மி வச்சின’’ 3. ‘‘அக்ஷயலிங்க’’ 4. ‘‘சியாமசுந்தராங்க’’

9) துருவதாளத்தின் இறுதி லகுவை நீக்கினால் பெறப்படும் தாளம்

1. ரூபகதாளம் 2. அடதாளம் 3. திரிபுடை தாளம் 4. மட்டிய தாளம்

10) ‘‘சங்கீர்ண’’, ‘‘விசித்திரசித்த’’ எனும் விருதுகளைப் பெற்ற மன்னன்

1. இராஜராஜசோழன் 2. மகேந்திரவர்மன் 3. பாண்டியமன்னன் 4. பல்லவமன்னன்

11) ‘‘தேவர் நாமாக்கள்’’ எனும் உருப்படிகளைச் செய்தவர்

1. புரந்தரதாஸர் 2. தீட்ஷிதர் 3. முத்துத்தாண்டவர் 4. பாரதியார்

12) **$1_9$** -எனும் அங்கம் குறித்து நிற்பது

1. கண்ட லகு 2. சதுஸ்ர லகு 3. மிஸ்ர லகு 4. சங்கீர்ண லகு

13) தாளம் தொடங்கும் முன் பாட்டு ஆரம்பிக்கும் எடுப்பு

1. அதீத எடுப்பு 2. அனகாத எடுப்பு 3. சம எடுப்பு 4.சம க்ரஹகம்

14) ‘‘ஸ்வாமி உன்னை...’’ எனும் வர்ணத்தை இயற்றியவர்

1. புரந்தரதாஸர் 2. வரதாச்சாரியார் 3. பாபநாசம் சிவன் 4. முத்துத்தாண்டவம்

15) சுத்தாங்கமாகப் பாடப்படும் உருப்படிகளுள் ஒன்று

1. தேவாரம் 2. திருப்பல்லாண்டு 3. திருப்புகழ் 4. அலங்காரம்

16) ‘‘அள்ளி உண்டிடலாம் வாரீர’’ எனும் உருப்படி பாடப்படும் இராகம்

1. பந்துவராளி 2. தோடி 3. சண்முகப்பிரியா 4. ஹம்சத்வனி

17) சங்கீர்ணஜாதி துருவதாளத்தின் மொத்த அட்சரங்கள்

1. 25 2. 26 3. 27 4. 29

18) தமிழிசையில் தாரம் எனப்படுவது

1. மத்திமம் 2. தைவதம் 3. நிஷாதம் 4. ரிஷபம்

19) தத வாத்தியங்களுள் ஒன்று

1. வயலின் 2. புல்லாங்குழல் 3. குழித்தளம் 4. மிருதங்கம்

20) ஓர் இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தில் ஸ்வரங்கள் மாறிமாறிச் செல்வது

1. வர்ஜ இராகம் 2. உபாங்கராகம் 3. வக்ரராகம் 4. பாஷாங்கராகம்

21) ‘‘மாயன்குழலிசையில்....’’ என்பது எவ்வகை உருப்படி

1. தில்லானா 2. ஜதிஸ்வரம் 3. ஸ்வரஜதி 4. பதம்

22) ''பண்ணும் பதம் ஏழும்.....'' எனும் பதிகத்தைப் பாடியவர்

1. மாணிக்கவாசகர் 2. சம்பந்தர் 3. சுந்தரர் 4. அப்பர்

23) குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர்

1. திரிகூடஇராசப்பக் கவிராயர் 2. பாரதியார் 3. தாண்டவர் 4. புரந்தரதாஸர்

24) அணைசு என்ற பகுதி காணப்படும் இசைக்கருவி

1. தவில் 2. நாதஸ்வரம் 3. மிருதங்கம் 4. வயலின்

25) க்ரஹ வேறுபாடு கிடையாத இசை வகை

1. ஹிந்துஸ்தானி இசை 2. கர்நாடக இசை 3. மேலைத்தேய இசை 4. ஐரோப்பிய இசை

26) சுத்த தைவதம், காகலி நிஷாதத்திற்குரிய ஸ்வர சங்கேதாட்ஷரம்.

1. தி,நி 2. த,ந 3. த,நு 4. து,நு

27) நீதபமா;; கமகரி காரீஸா; எனும் ஸ்வரக் கோர்வையின் மாத்திரைகள்

1. 17 2. 19 3. 22 4. 23

28) ஸரிகுமிபதிநு என்ற சங்கேதாட்சரங்களைக் குறிக்கும் இராகத்தின் மேள எண்

1. 8 2. 65 3. 51 4. 22

29) 31 - 36 வரையுள்ள இராகங்கள் அமைந்த சக்கரம்.

1. ப்ரஹ்ம 2. ரிஷி 3. வஸு 4. ருது

30) நாரதரால் சங்கீதக் கிரந்தத்தைப் பெற்ற வாக்கேயகாரர்

1.சியாமாசாஸ்திரிகள் 2. முத்துஸ்வாமி தீக்ஷிதர் 3. தியாகராஜர் 4. தாண்டவர்

31) பின்வருவனவற்றுள் விவாதி ஸ்வரங்களாவன

1. பிரதி மத்திமம், ஷட்சுருதி தைவதம் 2. சுத்த காந்தாரம், சதுஸ்ருதி தைவதம்

3. சுத்த மத்திமம். ஷட்சுருதி தைவதம் 4. சுத்த காந்தாரம், சுத்த நிஷாதம்

32) கர்நாடக இசைக்கு வயலினை அறிமுகப்படுத்தியவர்.

1. ஸ்ராடிவேரியஸ் 2. பாலுஸ்சுவாமிதீக்ஷிதர்

3. குன்னக்குடிவைத்தியநாதர் 4. லால்குடி ஜெயராமன்

33) தசவித கமகங்களையும் வெளிப்படுத்தும் ''விரிபோணி'' என்ற வரணத்தை இயற்றியவர்.

1. திரிகூட இராசப்பகவிராயர் 2. சியாமாசாஸ்திரிகள்

3. பச்சிமிரியம் ஆதியப்பய்யர் 4. கனம் கிருஸ்ணய்யர்

34) விலோமசாபு தாளத்தில் உருப்படிகளை இயற்றியவர்.

1. தியாகராஜர் 2. புரந்தரதாஸர் 3. சியாமாசாஸ்திரிகள் 4. முத்துஸ்வாமிதீக்ஷிதர்

35) மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்

1. குறிஞ்சி 2. நாதநாமக்கிரியை 3. நவரோஜ் 4. மத்தியமாவதி

36) சதுர்தண்டிப்பிரகாசிகை என்ற நூலை இயற்றியவர்.

1. ராமாமாத்யர் 2. கோவிந்தாச்சாரியார் 3. துளஜமகாராஜா 4. வெங்கடமகி

37) வேதச் சக்கரத்தின் நான்காவது இராகம்.

1. கரகரப்ரியா 2. சங்கராபரணம் 3. கரிஹாம்போதி 4. மாயாமாளவகௌளை

38) பந்துவராளி இராகத்திற்குரிய பண்கள்.

1. செம்பாலை, குறிஞ்சி 2. செவ்வழி, செந்துருத்தி

3. சாதாரி, நட்டராகம் 4. பஞ்சமம், பழம்பஞ்சுரம்

39) கர்நாடக இசையின் பொற்காலம் எனப் போற்றப்படுவது

1. 7ம்,8ம் நூற்றாண்டு 2. 17ம்,18ம் நூற்றாண்டு 3. 14ம்,15ம் நூற்றாண்டு 4. 20ம் நூற்றாண்டு

40) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – எல்லா வகையான உருப்படிகளையும் வாசிக்கக்கூடிய வாத்தியம்

B – ஏகத்வனி வாத்தியம்

C – தாளத்தந்திகளை உடைய வாத்தியம்

D – பெரும்பாலும் கச்சேரிகளில் பக்கவாத்தியமாக வாசிக்கப்படம்

மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் வீணை வாத்தியத்துடன் தொடர்புடைய கூற்று

1. A,B 2. A,C 3. B,C 4. B,D

(40×1 = 40 புள்ளிகள்)

## பகுதி 11

- ❖ பகுதி II இன் வினா இலக்கம் **ஒன்று** கட்டாயமானது.
- ❖ ஏனையவற்றில் இருந்து **நான்கு** வினாக்களைத் தெரிவு செய்க.
- ❖ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** 1. பாண - மா என அழைக்கப்படும் இராகம் எது?

2. இராம நாடகத்தை இயற்றியவர் யார்?

3. 8 இவ் அடையாளம் குறிக்கும் அங்கம் யாது?

4. இந்திய சங்கீதத்தில் இராக தாள அமைப்புடன் கூடிய மிகப் பழமையான உருப்படி எது?

5. நாட்டியத்திற்காக ஏற்பட்ட வர்ணம் எது?

6. “ஸ்ரீ ராஜராஜேஸ்வரி” எனும் கீர்த்தனையை இயற்றியவர் யார்?

7. “மானினேர்விழி” என்ற பதிகம் அமைந்த தாளம் யாது?

8. ஹிந்துஸ்தானி இசையில் கமாஜ் தாட் என அழைக்கப்படும் இராகம் யாது?

9. வர்ணத்தின் உத்தராங்க பகுதியில் இடம்பெறும் அங்கங்கள் எவை?

10. தியாகராஜ சுவாமிகளால் இயற்றப்பட்ட இரு இசை நாடகங்கள் எவை?

(1+1+1+1+1+1+1+1+2+2=12 புள்ளிகள்)

**2)** பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக?

1. காமவர்த்தனி
2. ஹரிகாம்போஜி
3. பண்-செந்துருத்தி

(மேள எண், ஆரோகண, அவரோகணம், ஸ்வரஸ்தானங்கள், விசேட அம்சங்கள், சஞ்சாரம், உருப்படி என்பன எழுதப்படல் வேண்டும் )

(1+2+2+4+1+2=12 புள்ளிகள்)

**3)**

1. கர்நாடக இசைக் கச்சேரியில் பிரதான தாள வாத்தியம் எது?

2. அவ்வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களை குறிப்பிடுக.

3. அவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

4. அவ் வாத்தியத்தினைச் சுருதி சேர்க்கும் முறையினைத் தருக.

5. அவ் வாத்தியத்தினை வாசிப்பதில் பிரபல்யம் பெற்ற வித்துவான்கள் பெயர்கள் 2 தருக.

(1+4+3+2+2=12 புள்ளிகள்)

**4)** முத்துஸ்வாமி தீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றை பின்வரும் விடயங்களின் கீழ் விவரிக்குக.

1. வாழ்கைக் காலம்
2. பிறந்த இடம்
3. இளமைக் காலம்
4. வாழ்க்கை சம்பவங்கள்
5. இவர் இயற்றிய உருப்படிகள் நான்கு
6. இவரது உருப்படிகளின் சிறப்புகள் இரண்டு

(1+1+2+2+4+2=12 புள்ளிகள்)

**5)** பின்வருவனவற்றில் ஒன்றிற்கு விரிவான விளக்கம் தருக.

1. க்ரஹம்
2. ஷடங்கம்
3. வர்ஜ இராகப் பிரிவுகள்

(12 புள்ளிகள்)

**6)** 1. விவாதி மேளங்கள் எத்தனை?

2. பூர்வாங்கத்தில் வரும் சக்கரங்கள் எவை?

3. 4வது சக்கரத்தில் வரும் இராகங்கள், மேள இலக்கம், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

(1+3+8=12 புள்ளிகள்)

**7)** இந்திய இசை வரலாற்றில் 17ம், 18ம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாச்சாரப் பின்னணி பற்றி விளக்குக?

அல்லது

நீர் கற்ற துருவ தாள அலங்காரத்தை அங்க அடையாளங்களுடன் எழுதுக.

(இராகம், தாளம், ஆரோகண, அரோகணம், இயற்றியவர், மொத்த அட்சரம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்)

(12 புள்ளிகள்)